DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.105/2026

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | செல்வராஜ் (Lw – 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 20.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், ஈச்சம்பட்டியில் குடியிருந்து டைலராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஆவணத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. **(**புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

(சாட்சியானவர் போலிசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் என்னை விசாரித்தபோது கடந்த 1 1/2 வருடத்திற்கு முன்பு நான் எனக்கு சொந்தமான ஆம்னி காரை எதிரியின் பட்டரையில் விட்டேன் என்றும், பின்பு எதிரி அந்த காரை சரிசெய்து கொடுத்துவிட்டார் என்றும் அதற்கான செலவு தொகையாக ரூ.20,000/-என எதிரி என்னிடம் சொன்னதாகவும், நான் ரூ.15,000/-

கொடுத்துவிட்டேன் என்றும் பின்பு மீதி பணத்தை பின்னர் தருவதாக கூறினேன் என்றும், இந்நிலையில் கடந்த 13.02.2026ம் தேதி பகல் 12.00 மணிக்கு எதிரி துரைசாமி எனது கடைக்கு வந்து என்னை டேய் கண்டாரஓலி பயலே என திட்டியதாகவும், பின்னர் கையால் எனது வலது பக்க கன்னத்தில் ஓங்கி குத்தி வீக்க காயத்தை ஏற்படுத்தியதாகவும், அதில் எனக்கு கீழ் தாடை பல் ஒன்று கீழே விழுந்ததாகவும், பின்னர் எதிரி எனது கடையில் இருந்த கத்திரிக்கோளை எடுத்து என்னை குத்த வந்தார் என்றும் அப்போது நான் அவரை தள்ளிவிட்டேன் என்றும் பின்பு எதிரி என்னை காலால் எட்டி உதைத்தார் என்றும் இடதுபக்க காதில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தினார் என்றும் நான் சத்தம் போடவே அருகில் இருந்தவர்கள் அங்கு வரவும் எதிரி என்னை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சமாதானமாக சென்றுவிட்டோம். சமரச மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(**சமரச மனு அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> இல்லை

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**